**O.S.No.225/2018**

**DW1 :** ஆறுமுகம் தேதி 23.3.2026

பிவாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு,9 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

இந்த வழக்கை தங்கவேல் என்பவர் பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்திருக்கிறார். என் அப்பா பெயர் முத்துசாமி கவுண்டர். வாதியின் அப்பா பெயர் செங்கோட கவுண்டர். முத்துசாமி கவுண்டரும் செங்கோட கவுண்டரும் உடன் பிறந்த சகோதரர்கள். பிவாசாஆ 1 முதல் பிவாசாஆ 4 ஆவணங்களில் உள்ள சொத்துகள் என் தந்தை கிரையத்திற்கு வாங்கிய தனிப்பட்ட சொத்துகள். அந்த சொத்தில் என் குடும்பத்தை தவிர வேறு யாருக்கும் பங்கு இல்லை. வாதியின் தந்தை கிரையம் பெற்ற சொத்தில் எங்களுக்கு உரிமை இல்லை. எங்களுடைய சொத்தை சுமார் 60 வருடத்திற்கு மேல் அனுபவித்து வருகிறோம். எங்கள் சொத்தை ஒட்டி 4 ம் பிரதிவாதிக்கு பாத்தியமான சொத்து உள்ளது. எங்களுடைய சொத்துக்கும் லோகநாதன் சொத்துக்கும் இடையே அ வ எண் 452/2015 என்ற வழக்கில் பாகப்பிரிவினை செய்து கொண்டோம். அந்த வழக்கில் லோகநாதனுக்கு பிரிவினை ஆன சொத்து அவருடைய தனிப்பட்ட சொத்து. லோகநாதன் அதை விற்பனை செய்துவிட்டார் என்றால் சரிதான். 9 முதல் 12 பிரதிவாதிகள் லோகநாதனிடம் கிரையம் வாங்கியவர்கள். அவர்கள் கிரையம் வாங்கிய பிறகு வீட்டு மனையாக பிரித்து விட்டார்கள். வாதி குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து அவர்களிடமே உள்ளது. வாதி குடும்பத்தார் சொத்தில் நான் கிரையம் வாங்கியிருக்கிறேன். அந்த கிரையம் வாங்கியதை நான் வாதிக்கே விற்று விட்டேன். வாதி பொய்யான விவரங்கள் கூறி வழக்கை தாக்கல் செய்திருக்கிறார். வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும்.

( 9 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைைய 4 ம் பிரதிவாதி தரப்பில் ஏற்று கொள்ளப்படுகிறது)